# படையினர் - புலிகள் பல மணிநேரம் கைகலப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முற்றுகைக்குள்ளாகியிருக்கும் ஆனையிறவு இராணுவ முகாமை நோக்கி வெற்றிலைக்கேணியிலிருந்து படையினர் முன்னேறிச் செல்லமுயன்றபோது பலமணிநேரம் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்குமிடையில்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஆடி 3 | இதழ்: 158
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 19-7-1991

## ஆனையிறவுப்பகுதியில் தொடர்ந்து குண்டுமாரி

(நமது நிருபர் இ. சத்தியானந்தம்)

ஆனையிறவு முகாமையண்டிய பகுதிகளில் காலை தொடக்கம் மூன்று பொம்மர்

(4ம் பக்கம் பார்க்க)

## சாம் - 7 பெற புலிகள் முயற்சியாம்

(வாஷிங்டன்)

ஐரோப்பிய நாடுகளில் சோவியத் தயாரிப்பான 'சாம்–7' விமான எதிர்ப்பு ஏவுகணைகளை வாங்க புலிகள் முயற்சித்ததாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி

(4 ம் பக்கம் பார்க்க)

# ★ வெற்றிலைக்கேணியில் தொடர்ந்து மோதல்

# 10 இராணுவ அதிகாரிகள் பலி

# மேலும் இரு 'பவள்' அழிப்பு

[யாழ்ப்பாணம்]

**கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி பகுதிகளிலிருந்து 5-வது நாளாக நேற்றும் முன்னேறமுற்பட்ட படையினர் பலத்த இழப்புகளுடன் தொடர்ந்தும் அதே இடத்தில் நிற்கின்றனர். நேற்றும் இரு பவள் கவச வாகனங்கள் புலிகளால் தகர்க்கப்பட்டுள்ளன.**

இப்பகுதியில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலான யுத்தத்தில் பத்து இராணுவ உயரதிகாரிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் 2-30மணியளவில் கட்டைக்காட்டுப் பகுதியில்நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் கவச வாகனங்களின் உதவியுடனும்,

[4-ம் பக்கம் பார்க்க]

## ஜா - பிரேமா அவசர சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா நேற்றுமாலை இந்திய தூதர் திரு. என்.என். ஜாவை அழைத்து அவசர சந்திப்பொன்றை நடாத்தியுள்ளார். இச்சந்திப்பின்போது நாட்

(4-ம் பக்கம் பார்க்க)

## யுகோஸ்லாவிய எல்லையில் இலங்கையர்கள் மீது சூடு

[பெல்கிரட்]

யுகோஸ்லாவிய எல்லையைக் கடக்கமுற்பட்ட பல இலங்கையர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடாத்தியுள்ளனர் இதில் படுசாயமடைந்த அனைவரும் ஆபத்தான நிலையிலிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த எல்லைப் பகுதியை சட்டவிரோதமாக 20 பேர் கடக்க முற்பட்டதாகவும் இவர்களில் பெருமளவினர் இலங்கையர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இத்தாலி, பல்கேரியா போன்ற நாடுகளுக்கு செல்ல முற்பட்டபோதே பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ஆனையிறவு போர் உடனடியாக முடியாது

(கொழும்பு)

ஆனையிறவுப்பகுதியில் நடைபெறும் போரில் விடுதலைப்புலிகளின் உறுதிப்பாடும் சண்டையின் தீவிரமும் சமாதானப்

(4-ம்பக்கம் பார்க்க)

## உணவு விநியோகம் தடைப்படலாம்

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்படுமானால் அடுத்த மாதம் அகதிகளுக்கான உணவு விநியோகம் தடைப்படலாமென யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு இந்த மாதத்துக்குதேவையான உணவுப் பொருட்கள் மட்டுமே கையிருப்பில் இருப்பதாகவும் உடனடியாக உணவுக் கப்பல்கள் இங்கு அனுப்பிவைக்கப்

(4ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அரங்கில் புலிகளுக்கு பெரும்ஆதரவு

(வாஷிங்டன்)

சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு பெருமளவு ஆத்ம ரீதியிலான ஆதரவு இருப்பதாகவும் நிதி நிலையிலும் புலிகள் பலமாயிருப்பதாகவும் 'நியூஸ் வீக்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பிரபல சஞ்சிகையான நியூஸ் வீக்கின் யூலை 1-ம் திகதி வெளியீட்டில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடுகையில்:

(4ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கப்?

[யாழ்ப்பாணம்]

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தற்போது நடைமுறையிலிருந்து வரும் ஊரடங்குசசட்டம் நாளை நீக்கப்படலாமென பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது. (வி)

## வடபகுதிக்கு உணவு அனுப்ப கூட்டுபடை அனுமதி மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு உணவுக் கப்பல்களை அனுப்புவதற்குக் கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு யாழ். அரச அதிபர் க. மாணிக்கவாசகர் தெரிவித்தார். அரச அதிபர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

''வடபகுதியில் தற்போது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் உணவுக் கப்பல்களை யாழ்ப்பாணத்துக்கு எந்தக் காரணம் கொண்டும் அனுப்ப முடியாதென்றும், ஊரடங்குச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்ட பின்பே உணவுக்கப்பல்களை அங்கு அனுப்பும்படி பாதுகாப்பு அமைச்சு

(4-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் இன்று ஆரம்பமாகின்றன.

ஊரடங்குச் சட்டம் அமுலினால் யாழ். மாவட்டத்தில் சில பாடசாலைகள் நடைபெறுதிருந்தது குறிப்பிடத்தக்கது. (152)

## 64 படையினர் பலி 254 பேர் காயம்

[கொழும்பு]

ஆனையிறவில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் இராணுவ தரப்பில் இதுவரை 64 பேர் பலியாகி 254 பேர் படுகாயமடைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு முகாம் மீதான முற்றுகை முறியடிக்கப்படும் வரை 'ஒப்பரேறஷன்

[4-ம் பக்கம் பார்க்க]

## பாடசாலை அதிபர்களுக்கு பணிப்பாளர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

''பாடசாலை அதிபர்கள், மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும்'' என்று யாழ். கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது; ''பாடசாலைகளை நேரசூசிகையின்படி நடாத்துதல்

[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### பாலாஜி புத்தகசாலே

புத்தகம், கொப்பி கட்டுவதற்கு ஆர்வமுள்ள பெண்பிள்ளேகள் தேவை. 15/6.முதலாம் ஒழுங்கை, மின்சார நிலேயவீதி, யாழ்ப்பாணம். எ-1440

### வியாழமாற்றம்

வருடம் முழுவதற்கும் 12 இராசிக்கும் தனித்தனியான பலன்களுடன் விற்பனையாகின்றது. கணித்து வெளியிடுபவர் ஜோஸ்யர். சகல புத்தகசாலேகளிலும் விற்பனேயாகின்றது. எ-1441

### தேவை

நாற்று மேடைக்கு செம்மண் (செம்பாட்டுமண்) ஒரு லான்ட் மாஸ்ரர் பெட்டி கொள்ளளவு தேவைப்படுகிறது. தொடர்பு கொள்ளவும்: மில்க் வைற், யாழ்ப்பாணம். (ஏ-1445)

### அம்பாள் திருமண சேவை

B. Sc., B. A. Teachers ஆகிய மணப் பெண்களுக்கு மணமகன் தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா 50/-. சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயா, வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [சி-5005]

### ஆங்கிலம்

ஆங்கிலம் நன்ருகப் படிக்க வாசிக்க எழுதத் தெரியவேண்டுமா? அல்லது வேலேயில் உள்ளவர்களுக்கோ, வெளிநாடு செல்பவர்களுக்கோ ஆங்கிலம் ஒரு தடையாக இருக்கிறதா? வீடுகளுக்குச் சென்று பாடம் சொல்லிக் கொடுக்கப்படும். ஆண்டு 8 தொடக்கம் O/L பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். நேரிலோ கடித மூலமோ தொடர்புகொள்ளவும் S. செல்லத்துரை, சந்தை ஒழுங்கை, சுதுமலே வடக்கு, மானிப்பாய். (சி 5008)

# "வெளிநாடு சென்ற ஈழத்தமிழர்கள் போரில் பங்குபெறவில்லேஎன இன்று வருந்துகின்ருர்கள்"

(யாழ்ப்பாணம்)

"இங்கு இடைவிடாது தினமும் குண்டுச்சத்தங்கள் கேட்கின்றன இங்குதாக்குதல்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இங்குள்ள ஒவ்வொருவரும் தினமும் குண்டுச்சத்தங்களின் மத்தியில் வாழ்கிருர்கள். இந்நிலேயில் சிலர் இனி இங்கு நிம்மதியாக வாழமுடியாது எனக் கருதி கொழும்பிற்கும் வெளிநாட்டிற்கும செல்கின்ருர்கள். ஆனல் வெளிநாடு சென்ற பல தமிழ் இளேஞர்களும் யுவதிகளும் தாம் இந்த தமிழீழ மண்மீட்பு போரில் பங்குபற்ற முடியவில்லே என்று இன்று மனம் வருந்துகின்ருர்கள்."

இவ்வாறு மட்டுவில் தெற்கு வேரக்கேணிகந்தசாமிகோயில் முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ். மாவட்ட கொள்கை முன்னெடுப்பு பிரிவைச் சேர்ந்த திரு. தனபால் கூறினர்.

அவர் மேலும்கூறியதாவது: ஆரம்பத்தில் எமதுபோராட்டம் சிறிய ஒரு கைத்துப்பாக்கியுடன்தான் ஆரம்பிக்கப்பட்டது அன்று மறைந்திருந்து தாக்கினர்கள். அன்றே இங்கு பொலிஸ் நிலேயங்கள் இல்லாதவாறு படிப்படியாக முன்னேறி தாக்கினர்கள் இன்று எதிரியின் முகாம் முன்நின்று நேரடியாகப் போராடுகின்ருர்கள். இன்று தமிழீழப் பிரதேசத்தில் எல்லாப் பாகங்களிலும் தினமும் ஒரு நேரத்தில் பல தாக்குதல்கள் நடைபெறுகின்றன. இவற்றிற்கு முகம் கொடுத்து ஒவ்வொரு ராணுவ முகாம்களேச் சுற்றியும் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வேலிகளாக நிற்பவர்கள்தமது சுகபோகங்களே இழந்து இந்த மண்ணே நேசிக்கின்ற தியாக உணர்வுடைய வீரம்மிக்க விடுதலேப்புலிகளின் இளேஞர்களும் யுவதிகளுமே. இங்குள்ள ஒவ்வொரு வீரர்களும் எதிரியின் பாசறை முன்னல் தமது முகங்களே எதிரிக்கு காட்டியவாறு ஆயுதம் தாங்கி நிற்கின்றனர் எமது புலி வீரர்கள் அங்கு காவல் கடமையில் நிற்பதனல் தான்நாம் இங்குகல்யாண வீடுகள்விழாக்கள் போன்றவற்றை குதூகலமாக செய்துமகிழ்ந்து கொண்டிருக்கின்ருேம்.

எமது வீரர்கள் மூன்று நாட்கள் உணவு இல்லாமல் எதிரியுடன சளேக்காமல் வெற்றியுடன் போராடிக்கொண்டிருக்கிருர்கள். பலாலிஇராணுவ கடும் யுத்தம் நடந்துகொண்டிருந்தபொழுது கோண்டாவிலில் இருந்து அங்கு சாப்பாடு கொண்டு சென்று கொண்டிருந்த போர் வீரன் ஒருவன் ஹெலிசூட்டில் இறந்து விட்டான். ஒவ்வொரு விமானத் தாக்குதல்கள் மத்தியிலும் தமது உணர்வுகளே இழக்காமல் புலிகள்போராடிக் கொண்டிருக்கின்ருர்கள்.

## இறுதியாண்டு பரீட்சை

[கொழும்புத்துறை]

யாழ். ஆயுர்வேதக் கல்லூரியின் டிப்ளோமா பட்டப்பின் இறுதியாண்டு பரீட்சை நாளே 20-ம் திகதி சனிக்கிழமை கொழும்பில் ஆயுர்வேத இலாகாவினல் நடாத்தப்படவிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த டிப்ளோமாப்பரீட்சை கடந்த ஆண்டு நடாத்தப்பட வேண்டியது குறிப்பிடத்தக்கது. [154]

## ராஜீவ் கொலே 139பேர் விசாரணே

[சென்னே]

முன்ள. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலேபற்றி விசாரணே செய்யும் மத்திய புலனய்வுக்குழுவினர் இதுவரையில் 12 பேரை கைது செய்துள்ளதாகவும் 32 இடங்களில் சோதனே மேற்கொள்ளப்பட்டதாகவும் 139 பேர் விசாரணேக்குட் படுத்தப்பட்டதாகவும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் தெரிவித்துள்ளார். [க]

## பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க தெல்லிப்பளேக் கிளே பொதுக் கூட்டம் இம்மாதம் 21ம் தேதி ஞாயிறு காலே 9 மணிக்கு தெல்லிப்பழை பல நோ. கூ. சங்க மண்டபத்தில் திரு. வ. குமாரசாமி தலேமையில் நடைபெறும்.

## 'சலாடின்' வெடித்தபோது ராணுவத்தினர் மிக உயரே தூக்கி வீசப்பட்டனர்!

[யாழ்ப்பாணம்]

கட்டைக்காட்டுப் பகுதியில் நிலேகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட பாரிய படையெடுப்பை விடுதலேப் புலிகள் முறியடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலே 6-30 மணிக்கு 1500க்கும்மேற்பட்ட இராணுவத்தினர் நவீன கவச வாகனங்கள் சகிதம் முன்னேற முற்பட்டனர் என்று கூறப்படுகிறது.

### கடற்படை உதவி

இவர்களுக்கு உதவியாக கடற்படையினர் பலத்த பீரங்கித் தாக்குதல்களே புலிகளின் பகுதிகளே நோக்கி சரமாரியாக நடாத்தினர். இதேபோல் ஆகாயப்படையினரும் வானத்திலிருந்து பாரிய குண்டுகளே வீசினர்.

இவை அனேத்தையும்பொருட்படுத்தாது விடுதலேப் புலிகள் தரை மார்க்கமாக முன்னேற முற்பட்ட இராணுவத்தினரை மிகத் துணிவுடன் நின்று ஆர் பி. ஜி தாக்குதல்களேயும் பீரங்கித் தாக்குதல்களேயும் மேற்கொண்டதில் இராணுவத்தினரின் 'பவள்' வாகனம் ஒன்று முற்ருக எரிக்கப்பட்டதுடன் பல வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

சேதமாக்கப்பட்ட வாகனங்களேச் சுற்றியும் தகர்க்கப்பட்ட பவள் வாகனத்தைச் சுற்றியும் பல இராணுவத்தினரின் உடல்கள் சிதறிக் கிடந்ததையும் காணக்கூடியதாக இருந்ததுடன் பலரின் அவலக் குரல்களேயும் கேட்கக்கூடியதாகவும் இருந்ததாம்.

### 3 மணி நேரம் மோதல்

இக்கட்டத்தில் இராணுவத்தினரின் மிகுதி வாகனங்களும் இராணுவத்தினரும் மிகவேகமாக பின்நோக்கிச்சென்றதை காணக்கூடியதாக இருந்தது. இம்மோதல் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை நடைபெற்றது.

### மீண்டும் முன்னேற...

இதன் பின்னர் பிற்பகல் சுமார் 2-30 மணியளவில் இராணுவத்தினர் பெருந்தொகையாக மீண்டும் கவச வாகனங்கள் சகிதமும், கடற்படை, விமானப்படையினரின் குண்டு வீச்சுக்களின் துணேயுடனும் கட்டைக்காட்டுப் பகுதியின் ஊடாக பரந்து விரிந்து தாக்குதல்களே மேற்கொண்டு முன்னேற முற்பட்டனர்.

### பலத்த தாக்குதல்

சிலயார் தூரம் இராணுவத்தினர் முன்நோக்கி வந்ததும், அவர்கள்மீது பலத்ததாக்குதல்கள் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டன. அப்போது இராணுவத்தினர் துணேக்கு கொண்டுவந்த மணல்பரப்பில் மிக வேகமாகச் செல்லக்கூடிய 'சலாடின்' என்னும் நவீனரக கவசவாகனங்கள் இரண்டை முற்ருகத் தகர்த்து எரியச் செய்தனர். இக்கவசவாகனங்கள் வெடித்துச் சிதறியபோது அதில் வந்த பல இராணுவத்தினர் மிக உயரத்துக்கு தூக்கி வீசப்பட்டனர்.

இக்கட்டத்தில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும், படுகாயமடைந்துள்ள போதிலும் அவற்றைச் சிறிதளவும் பொருட்படுத்தாமல் இராணுவத்தினர் மூர்க்கத்தனத்துடன் முன்னேறுவதற்கே முற்பட்டுக் கொண்டிருந்தனர்.

### தீரத்துடன் தாக்குதல்

இச்சந்தர்ப்பத்தில் விடுதலேப் புலிகள் பல திசைகளிலுமிருந்து ஒன்ருக இராணுவத்தினர் மீது மிகத்தீரத்துடனும் துணிவுடனும் தாக்குதல்களே மேற்கொண்டதில் பலஇராணுவத்தினர் அடுத்தடுத்துகொல்லப்பட்டனர். இடைவிடாது இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலினல் நிலேகுலேந்த இராணுவத்தினர் காயமடைந்த தமது சகாக்களே தூக்கியவண்ணமும், சிலரை மணலின் ஊடாக இழுத்துக் கொண்டுபின்னல் சென்றதாகவும் கூறப்படுகிறது. [வி]

## போட்டிகள் ஒத்திவைப்பு

[கொழும்புத்துறை]

யாழ். மாநகர சனசமூக நிலேயங்களின் சமாஜம் நடாத்தும் சகல விளேயாட்டுப்போட்டிகளும் [வலேப்பந்தாட்டம் எல்லே, உதைபந்தாட்டம் தாச்சி] தவிர்க்க முடியாத காரணத்தினல் பிற்போடப் பட்டுள்ளது.

மீண்டும் போட்டிகள் ஆரம்பமாகும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனச் சமாஜத் தலேவர் திரு. கோ. தியாகராசா அறியத்தருகிருர். [154]

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். சொய்யாத்தோட்டம் சனசமூக நிலேயம், ஐக்கிய விளேயாட்டுக் கழகம் நடாத்தும் 21-வது ஆண்டு நிறைவின் மென்பந்து, கிரிக்கெட், கரபந்தாட்டம், செற்றப் ஓவர் ஆகியவற்றின் சுற்றுப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினல் பின்போடப் பட்டுள்ளது. [154]

## களப் பலியான வீர வேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு மோதலில் வீரமரணமடைந்த 5போராளிகளின் புகழுடம்புகள் நேற்று முன்தினம் சுன்னுகம் மயிலணி சைவ ம.வி. யில்மக்களஞ்சலிக்காக வைக்கப்பட்டுபின் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமானது.

குழந்தை (மட்டக்களப்பு), நாதன் [அம்பாறை], லக்ஷ்மன் [அச்சுவேலி], ஜோன் [மூதூர்], சிவபாலன் (சங்கானே) ஆகியோரது புகழுடம்பிற்கே பெருமளவு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலிக் கூட்டத்தில் புலிகள் மூத்த உறுப்பினர் திரு. தேவர், மாணவர் இயக்க பொறுப்பாளர் திரு. மரிசாலப்பா, குகதாஸ் மாஸ்ரர், திரு. செல்வம் ஆகியோரும் உரையாற்றினர்.

## கிளிநொச்சியில் நெல்லேக் கொள்வனவு செய்ய முடிவு

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சியிலிருந்து போதியளவு நெல்லேநியாமான விலேயில் கொள்வனவுசெய்து ப. நோ. கூ. சங்க களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்துவது என நேற்று நண்பகல் நடைபெற்ற கூட்டுறவாளர் மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல ப. நோ. கூ. சங்க தலே

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்று

(யாழ்ப்பாணம்]

ஆனேயிறவு போரில் வீரத்தழும்பினே தழுவிக் கொண்ட வீரவேங்கைகள் பூரணசுகம்பெற வேண்டியும், களத்தில்நின்று போராடும் வீர வேங்கைகளிற்கு ஆத்மபலம் வேண்டியும் இன்று 19ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பிரார்த்தனே

## விமான எதிர்ப்பு பீரங்கி புலிகள்வசம் உண்டு

(கொழும்பு)

ஆனேயிறவு, கட்டைக்காடு, வெற்றிலேக்கேணியில் இடம்பெற்றுவரும் யுத்தத்தில் புலிகள் விமான எதிர்ப்பு பீரங்கிகளே பயன்படுத்தி வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புலிகளின் விமானஎதிர்ப்பு பீரங்கி விமானப்படைக்குப் பெரும் சிக்கலே ஏற்படுத்திவருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது (சி)

## மானிப்பாயில் இரு சுகாதார வைத்தியப் பிரிவுகள்

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது. சங்கானே, சண்டிலிப்பாய் என்று இருபிரிவுகளாக செயற்படும் இப்பிரிவில் சங்கானே சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் செல்வி வி. நடராஜா நியமிக்கப்பட்டுள்ளார். மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் திருமதி எஸ். சுந்தரலிங்கம் சண்டிலிப்பாய் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றுகின்ருர். (72)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

நாட்டின் தற்போதைய நிலே காரணமாகப் பல பாடசாலே அதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்க யாழ். சைவபரிபாலன சபையின் சமயபாடப் பரீட்சையின் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி இம்மாதம் 31-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று உதவிப் பரீட்சை செயலாளர் தெரிவித்துள்ளார்.

## அகதிகள் இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

சங்கானே கலாச்சார மண்டபத்தில் தங்கிருந்த காரைநகரை சேர்ந்தஇடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு பொதுநல நிறுவனங்களினல் புதிய குடியிருப்புகள் சங்கானே தெற்கில் நிறுவிக்கொடுக்கப்பட்டதை அடுத்து அங்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## ★ தமிழீழத்தின் எதிர்காலத்தை ஆராய கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில்

# இன்று 'தமிழீழ ஆய்வு மாநாடு' ஆரம்பம்

### அமெரிக்க அரசு பூரண பாதுகாப்பு

(கலிபோர்னியா)

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநில பல்கலைக்கழகத்தில் இன்று 19-ம் திகதி 'தமிழீழ ஆய்வு மாநாடு' கோலாகலமாக ஆரம்பமாகின்றது. 'ஏ நேஷன் வித்தவுட் ஏ ஸ்ரேற்' எனும் தலைப்பிலான இம்மாநாடு 21-ம் திகதி வரை சிறப்பாக நடைபெறவுள்ளது

இம்மாநாட்டை 'சர்வதேச தமிழர் ஒன்றியமும்', கலிபோர்னியா பல்கலைக்கழகமும் இணைந்து நடத்துகின்றன. இதற்கான சகல பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கலிபோர்னியாமாநிலபொலிஸார் ஏற்றுள்ளனர்.

#### ஆய்வுரை கருத்தரங்கு

பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்ளவுள்ள இம்மாநாட்டில் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுரைகள், கருத்தரங்குகள், விவாதங்கள் நடைபெறவுள்ளதாக அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர் மேலும் உலகின் பல நாடுகளிலுமிருந்து 'தமிழீழத்தின் தொடர்பாக சகல துறைகளுக்குமான அபிவிருத்தி குறித்து நூற்றுக்கணக்கான ஆய்வுரை அறிக்கைகளும் மாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இம்மாநாட்டில் தமிழீழத்தைக் கட்டியெழுப்பக் கூடிய பொருளாதார அபிவிருத்தியும் அங்கு காணப்படும் இயற்கை வளங்களும், மீன்பிடி, விவசாயம், மின் உற்பத்தி, உல்லாசப்பயணம்.

இதனால் தமிழீழம் உருவாகும் போது தமிழீழ மக்களால் நிலையான, வெற்றிகரமான தமிழீழத்தை ஸ்தாபிக்க தமிழீழத்தில அடிப்படை வசதிகள் இருப்பதை நிரூபித்துக்காட்டுதல் பற்றியும் ஆய்வுகள் நடைபெறும்.

#### தமிழீழ வங்கி

மேலும் தமிழீழம் உருவாகும்போது 'தமிழீழ வங்கியை' ஸ்தாபித்தல் அதற்குரிய சட்டவாக்கம், நடைமுறைகளைத் தயாரித்தல். தமிழீழ மக்களின் தேவைகளை அவ்வங்கி எவ்வகையில் பூர்த்தி செய்யும் என்பதனை விளக்குதல்.

அரசியல் யாப்பும் அதன் மாதிரியும் ஆகியன தொடர்பான ஆய்வுரைகளும் இங்கு சமர்ப்பிக்கப்படவுள்ளன.

#### சிங்கள சக்திகள் குழப்ப முயற்சி

இதற்கிடையில் இம்மாநாட்டை குழப்ப அமெரிக்காவிலுள்ள சிங்கள சக்திகள் தொடர்ந்தும் முயற்சித்துவருகின்றன. இச்சக்திகளுக்கு இலங்கை அரசின் பூரண ஆதரவு இருந்துவருகிறது. மாநாட்டு அமைப்பாளர்களுக்கு தினமும் தொலைபேசி மிரட்டல்கள் வந்தவண்ணமிருக்கிறதாம்.

#### பொலிஸார் பாதுகாப்பு

இம்மாநாட்டை நிறுத்துமாறு இலங்கைத்தரப்பில் விடுக்கப்பட்ட பல கோரிக்கைகளை அமெரிக்க அரசு ஏற்கனவே நிராகரித்துள்ளதுடன் மாநாடு நடைபெறும் நாட்களில் பாதுகாப்பு வழங்கவும் கலிபோர்னியா பொலிஸார் முழு ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர். (சி)

## போராளிகளுக்கு உணவு வகைகள்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு போரில் ஈடுபட்டுள்ள போராளிகளுக்கு வண்ணார்பண்ணை சிவன் கோவிலைச் சூழவுள்ள பகுதிகளில் வாழும் மக்களும், சிவன் வடக்கு வீதி, காங்கேசன்துறைவீதி மக்களும் சேர்ந்து 30 கிலோ முட்டை மாவையும், 160 குளுககோஸ் பைக்கெட்டுகளையும் யாழ். பிராந்திய வட்ட அவைச் செயலகப் பொறுப்பாளர் திரு. கமல் மாஸ்ரரிடம் கையளித்துள்ளார்கள்.

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் பல்வேறு பகுதிகளில் தற்போது நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டிகள் யாவும் காலவரையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ளன.

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் குமரையா வெற்றிக்கிண்ணப் போட்டியும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (வி)

## சான்றிதழ் வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த தீவுப்பகுதி உறுப்பினர்கட்காக நடாத்தப்பட்டு வரும் சென் ஜோன் முதலுதவி வகுப்புகளில் இதுவரை கலந்து கொண்டு பரீட்சைக்கு தோற்றி சித்தி எய்திய சகலருக்கும், ஏற்கனவே சித்தி பெற்று சான்றிதழ்களை பெற தவறியோருக்குமான சான்றிதழ்கள் நாளை 20-ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். லங்கா ஆயுர்வேதக்கல்லூரியில் தீவுப்பகுதி அத்தியட்சகரின் தலைமையில் நடைபெறும் வைபத்தில் வழங்கப்படும்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆணையாளர் கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி கலந்து கொள்வார் பரீட்சையில் சித்தி அடைந்தோருக்கான சான்றிதழ்கள் திருமதி ஜொவித்தா இன்னாசித்தம்பி வழங்குவார்.

# யாழ். குடாநாடு புலிகளின் பலமான கோட்டை!

யாழ். குடாநாடு விடுதலைப் புலிகளின் பலமான கோட்டை. தொடர்ந்து யாழ். குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விடுதலைப்புலிகள் மிக தீவிரமாக போராடி வந்திருக்கின்றனர்.

ஆனையிறவுக்காக நடக்கும் போர் என்ற தலைப்பில் பி பி. ஸி யின் தென் கிழக்காசிய செய்தியாளர் ஜஸ்மிந்தர் சிங் எழுதிய ஆய்வுரைக்கண்ணோட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாணப் பகுதியை ஏனைய பிரதேசங்களுடன் இணைக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த 200 மீற்றர் நீளமான கடப்புவழி தரைப் பாதை ஆனையிறவு.

தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் யாழ். குடா நாட்டிற்குச் செல்லும் ஓரேயொரு தரைமார்க்கம் இதுவாதலால் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா அரசுக்கும் புவியியல் ரீதியிலும், அரசியல் ரீதியிலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இப்பகுதி கருதப்படுகிறது.

இலங்கையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் குறித்து இந்திய அரசு மௌனமாக இருப்பது இலங்கை குறித்த இந்தியாவின் போக்கில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதனை கோடி காட்டுவதாக உள்ளதாகவும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையினால் ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கை அரசுக்கு ஊக்கமளிப்பது போல் தோன்றுவதாகவும் இந்திய அரசு முன்னரைவிட தற்போது இலங்கை அரசுக்கு அனுதாபம் காட்டுவது போல் உள்ளதாகவும் இந்தியவெளியுறவு அமைச்சகத்திற்கு நெருங்கிய தரப்பினர் தரும் தகவல்களில் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்,

மேலும் 1987 இல் ஏற்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்திருந்தது. இலங்கை தமிழர்களின் பிரச்சனைக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஓர் அரசியல் தீர்வைக் கொண்டு வரமுடியும் என்பதில் காங்கிரஸ்கட்சி நம்பிக்கைவைத்திருந்தது.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை பாதுகாப்பதிலும், இலங்கையின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதிலும் தீர்வு காண்பதிலும் காங்கிரஸ்கட்சி கவனம் செலுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்றும் இந்தியா இலங்கை அரசு பக்கம் அதிகம் சாருகிறது என்ற அபிப்பிராயம் ஏற்படாத வகையில் அரசியலில் திறந்த கொள்கை கடைப்பிடிக்க வேண்டும் என்பதே இந்திய வெளியுறவு அமைச்சகத்தினரின் பெரும்பாலானோரின் கொள்கை போல் தெரிகிறது.

இலங்கையின் வடபகுதியில் தற்பொழுது நடைபெறும் யுத்தம் குறித்து இந்தியா அலட்சியமாக இருப்பது இலங்கை அரசுக்கு ஊக்கம் தரக்கூடும். ஆனால் இச்சண்டை முடிந்தால் அல்லது இச்சண்டையில் பெரும்பாலான பொது மக்கள் இன்னல்களுக்குள்ளானால் அரசியல்ரீதியில் இப்பிரச்னைக்கு தீர்வு காணும்படி அனைத்துலக சம்மேளனம் இலங்கையரசுக்கு நெருக்குதல் கொடுக்கக்கூடும்.

எனவேதான் பாதுகாப்புப் படையினர் கடற்படை மற்றும் விமானப் படையினரின் உதவியுடன் ஆணையிறவைக் கைப்பற்றுவதற்கு தீவிரதாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்திருக்கக் கூடும்.

### பி. பி. ஸியின் கணிப்பு

உடனடியாக இராணுவம் வெற்றியீட்டுவதே இலங்கையரசின் நோக்கம்போல் தெரிகிறது. இவ்வாறு பி. பி. ஸி செய்தியாளர் தமது ஆய்வுக் கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளார். [க]

## இராசி பலன்

19 - 07 - 1991

வெள்ளிக்கிழமை

அட்டமி பி.ப. 2-03 வரை.

சித்திரை மு. ப. 11-08 வரை.

மரணயோகம்.

இராகுகாலம் காலை 10-31 முதல் 12-01 வரை

சுபநேரம் மாலை 6-01 முதல் 7-31 வரை.

மேடம்: குடும்பத்தில் கலகலப்பு, நற்செய்தி, பொருள் வரவு.

இடபம்: பயணங்களால் நன்மை, பணவரவு, தொழில் சிறப்பு

மிதுனம்: வாக்குக்கலகம், அவசரமுடிவு, பகைவர் தொல்லை.

கடகம்: பதட்டம், மன அமைதிகுன்றல், கவலைதரும் செய்தி.

சிங்கம்; வெளியூர்பயணம், குடும்பசுகம், காரியசித்தி.

கன்னி: வருமானம்பாதிப்பு, கடிதத்தொல்லை. மனக்குறை.

துலாம்: குடும்பசுகம், சகோதர வருகை, விருந்துபசாரம்.

விருச்சிகம்! விபரீத எண்ணம், பணக்கஷ்டம், அகால போஜனம்.

தனுசு: மன நிறைவு, தொழில்பாராட்டு, மேலான நிலை.

மகரம்: பொதுத்துறை ஈடுபாடு, தொழில் மாற்றம், புகழ்.

கும்பம்: உடல் உபாதை, பெண்பகை, மனக்குழப்பம்.

மீனம்: தொழில் பிணக்கு, மனைவியால்துன்பம், வேண்டா வெறுப்பு.

ஜோஸ்யர்

# கடற்படையினரால் மீனவர்கள்பாதிப்பு

(மாங்குளம்)

முல்லைத்தீவு பொக்கணை பகுதியில் இருந்து தொழிலுக்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் கடற்படையினரால் இம்சைக்குள்ளாகும் சம்பவங்கள் சமீப நாட்களாக அதிகரித்துள்ளன.

இப்பகுதி கடற்படையினரால் மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கும், தாக்குதலுக்கும் அடிக்கடி ஆளாக்கப்பட்டுவருவதோடு மீன் வலைகள் சேதப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரின் அச்சுறுத்தல் தொடர்வதால் இப்பகுதி மீனவர்கள் கடலுக்குத் தொழிலுக்குச் செல்ல அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (150)

# மடு அகதி முகாமில் உணவுபற்றுக்குறை

(மன்னார்]

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தால் பராமரிக்கப்பட்டு வரும் மடுக்கோயில் அகதிகள் முகாமில் உணவுப்பற்றுக்குறை தற்போது ஏற்பட்டுள்ளது.

கடந்த 10ந் திகதி மடுக்கோயில் அகதிகள் முகாமுக்கு அனுராதபுரத்திலிருந்து 18 லொறிகளில் வரவேண்டிய 180 மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் ஊரடங்குச்சட்டத்தின் விளைவாக எடுத்து வரப்படவில்லை.

ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்பட்டால் மேற்படி முகாமில் உணவுப்பஞ்சம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்குமென்று தெரிவிக்கப்படுகிறது.

மடுக்கோயில் அகதிகள் முகாமில் 30 ஆயிரம் இடம் பெயர்ந்த அகதிகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. (153)

## வடமராட்சி கிழக்கில் அகதிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள்

(கொழும்புத்துறை)

வடமராட்சி கிழக்கில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தினரால் மீன்பிடி உபகரணங்கள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

இவ் உபகரணங்கள் திருகோணமலை, பலாலி. காங்கேசன்துறைமயிலிட்டிமுல்லைத்தீவு ஆகிய இடங்களில் இருந்து வந்து வடமராட்சி கிழக்கில் முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு குடும்பங்களுக்குப் பத்தாயிரம் ரூபா என்ற அடிப்படையிலேயே மேற்படி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஏழாயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடிவலை உபகரணங்களும் மீதி மூவாயிரம ரூபா சட்டுமரம் வாங்குவதற்கும் பணமாக கொடுக்கப்பட்டுள்ளது.

மாதம்தோறும் 250 ரூபா வீதம் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற கடன் அடிப்படையிலேயே இக் கொடுப்பனவுகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (154)

### ★ கடந்த 10 நாட்களாக

# ஆனையிறவில் 800 சிப்பாய்கள்

# புலிகளின் முற்றுகையில்!

[கொழும்பு]

ஆனையிறவு முகாமை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் இராணுவத்துடன் கடுமையாகப் போரிட்டு வருகின்றனர்.

பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

ஆனையிறவு முகாமில் 800 இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் அகப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலை ராணுவத்தினர் எதிர்கொண்டு முகாமைக் காப்பாற்றுவதற்கு தொடர்ந்தும் கடுமையாகப் போரிட்டு வருகின்றனர்.

ஆனையிறவு முகாமில் முற்றுகைக்குள்ளாகியிருக்கும் இராணுவத்தினருக்கு உதவியாக சுமார் இரண்டாயிரம் துருப்பினர் அனுப்பப்பட்டுள்ளனர். விமானப்படையினரின் துணை இவர்களுக்கு இருந்த போதிலும் இவர்கள் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்புகளை சமாளிக்கவேண்டிய நிலையிலேயே உள்ளனர்.

## யாழ். செயலகத்திற்கு மின்சாரம் கிடைத்தது

[யாழ்ப்பாணம்]

யாழ் செயலகத்துக்கு நேற்றுமுதல் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரின் முயற்சியால் கொண்டுவரப்பட்ட ஜெனரேட்டர் மூலமே மேற்படி மின்சாரம் வழங்கப்படுகின்றது.

இந்த மின்சாரவசதி தற்போது யாழ். செயலகத்திலுள்ள அத்தியாவசியப் பிரிவுகளான பிறப்புச்சான்றிதழ்ப் பகுதி, ஓய்வூதியப்பகுதி, அரச அதிபர் பகுதி ஆகியவற்றுக்கே வழங்கப்படுகிறது. (வி 71)

### சர்வதேச அரங்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச ரீதியில் பிரிட்டனின் ஐரிஸ் கெரில்லாக்களை விட ஆதரவிலும், நிதியிலும் புலிகளுக்கே பெருமளவு ஆதரவுள்ளது. மேலும் புலிகளின் அணுகுமுறை கம்போடியாவின் கமரூச் கெரில்லாக்களினதும் பெரு நாட்டின் 'சைனிங் பாத்' அமைப்பினதும் அணுகுமுறையைவிட வித்தியாசமானதென்றும் தெரிவித்துள்ளது. (சி)

### பாடசாலை அதிபர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். பாடசாலைகள் முடிவுற்றதும் மாணவர்களை ஒருமித்து வீட்டுக்கு அனுப்பாது வகுப்பு ரீதியில் பகுதி பகுதியாக அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

விளையாட்டுப் போட்டி, மாணவர் கல்விச்சுற்றுலா, பரிசளிப்பு விழா, கலை விழாக்கள் போன்றவற்றை மறு அறிவித்தல் வரும்வரை பின்போடுதல் வேண்டும்.

நேர சூசியில் ஒதுக்கப்பட்ட உடற்பயிற்சி செயற்பாடுகளை மரங்களின் கீழ் நடாத்த நடவடிக்கை எடுத்தல்வேண்டும். (152)

### கிளிநொச்சி

(2-ம் பக்கத் தொடர்ச்சி]

வர்கள், பொதுமுகாமையாளர்கள், கூட்டுறவு பரிசோதர்கள் ஆகிய அனைவரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டார்கள். உணவுப்பஞ்சம் ஏற்படும் காலத்தில் சேமிக்கப்படவிருக்கும் நெல்லை பயன்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. [153]

## மாவீரருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய பிரதேசங்களில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடந்த மோதலில் வீரமரணத்தை தழுவிக்கொண்ட மாவீரர்களின் புகழுடல்கள் நேற்று நவாலி சென். பீற்றேர்ஸ் வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

மக்கள் அஞ்சலியை அடுத்து ஊர்வலத்துடன் கோப்பாய் மாவீரர் மயானத்தில் அவர்களது புகழுடல்கள் தீயுடன் சங்கமமாகியது. [152]

### வடபகுதிக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கு வலியுறுத்தியுள்ளதாக, முப்படைத் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் யாழ். நகரில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணத்துக்கு உடனடியாக உணவுக் கப்பல்களை அனுப்பிவைக்குமாறு கூட்டுப்படைத் தலைமைச் செயலகத்துக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இது குறித்து கொழும்பில் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அவசர சந்திப்பொன்றும் நடைபெற்றதாம். -வி

### படையினர் - புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரடிக் கைகலப்புமோதல்கள் இடம்பெற்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது: இப்பகுதியில் துருப்புகளின் முன்னேற்றம் எதிர்பாத்தது போல துரிதமாக நடைபெறவில்லை. இருந்தாலும் ஆனையிறவு முகாமை கைவிடும் எண்ணம் அரசுக்கு இல்லை.

இந்தப் பகுதியில் மேலும் கூடுதலான இராணுவ முகாம்கள் அமைக்கப்படக்கூடும் என்று தெரிவித்த அவர் ஆனையிறவு மோதல் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதனைக் கூற மறுத்துவிட்டார்.

## தடகள போட்டி ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் வட்டவை ரீதியாக நடைபெறவிருந்த தியாகி திலீபன் ஞாபகார்த்த தடகள விளையாட்டுப் போட்டிகள் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது.

## இன்று

வண்ணை அருள்மிகு செந்தில் கதிர்வேலாயுத சுவாமிகோவிலில் தமிழீழ மக்கள் சுபீட்சத்திற்காகவும் போராளிகள் வெற்றி பெறவும், இன்று வெள்ளிக்கிழமை பகல் 10-00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையும், நண்பகல் அன்னதானமும் இடம்பெறும்.

## பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் முறைசாரக் கல்விப் பிரிவில் மின் உபகரண உற்பத்தி மோட்டார் றீவைன்டிங் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை நாளை சனிக்கிழமை இந்துக்கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### 64 படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலவேகய' தொடரும் என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் 19 படையினர் கொல்லப்பட்டதாகவும் கூறினார்.

### உணவு விநியோகம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படாவிட்டால் அடுத்த மாத உணவு விநியோகம் சிலவேளை தடைப்படலாமென்றும் அவர் தெரிவித்தார். (வி)

## ராணுவம் தரித்து நிற்கும் கட்டைக்காட்டின் அமைப்பு

(நாகர்கோவில்)

ஆனையிறவு நோக்கி செல்ல முயலும் இராணுவம் இறங்கியுள்ள கட்டைக்காடு - வெற்றிலைகேணிப் பகுதி முழுவதும் மணல்மேடுகள் நிறைந்த பகுதியாகும். இங்கு வீதிகள் கிடையாது. வாகனங்கள் செல்லமுடியாதவாறு மணல் நிறைந்திருக்கும், சிறு பற்றைகள் மட்டும்தான் ஆங்காங்கே காணப்படும்.

இந்த இடத்தில் எங்கு தோண்டினாலும் ஒரு சில நிமிடத்தில் நன்னீர் கிடைக்கும். வெள்ளைமணலும் கறுப்பு மணலும் பிட்டி பிட்டியாகக் காட்சியளிப்பதால் இரவு வேளைகளில் தவழ்ந்து தவழ்ந்து தான் இராணுவம் நகரமுடியும். இது சாத்தியப்படக் கூடியதல்ல என அப்பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக 'விஜயசூரியா' கப்பல் நிலைகொண்டிருக்கும் பெருங்கடல் 'பெண் கடல்' என்பதால் கப்பலை கூடிய வரை கரைப்பிரதேசத்துக்கு நகர்த்தி வரமுடியும். (எஸ்)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180386/81

## சட்டக்கல்லூரி விடுதியில் குண்டு வெடிப்பு

(சென்னை)

சென்னையிலுள்ள சட்டக்கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தினுள் வெடிகுண்டு ஒன்று நேற்று வெடித்தது. இதனால் ஒரு பெண் படுகாயமடைந்தார்.

குண்டு, பிளாஸ்ரிக் உறையினுள் வைக்கப்பட்டு குப்பைத் தொட்டியில் வைக்கப்பட்டிருந்தவேளை ஒரு பெண் பத்திரிகைகள் பொறுக்கும்போதே இக்குண்டு வெடித்தது.

ராஜீவ் காந்தி கொலையின் பின் வெடிகுண்டு என்றாலே பீதியடையும் சென்னை மக்கள் இக்குண்டுவெடிப்பால் மேலும் பீதியடைந்துள்ளனர். (பூ)

## வல்லிபுர ஆலய சூழலில் விமானக் குண்டுவீச்சு

(புலோலி)

சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் பகுதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் பொம்மர் விமானம் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் கோவிலின் தென் பகுதியிலுள்ள மடம் ஒன்றும் நிழல்தரும் மரமொன்றும் சேதமாகின.

இத்தாக்குதலுக்கு முன்னதாக குடத்தனைச் சந்திக்கு அண்மையில் நடத்தியகுண்டுத் தாக்குதலில் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி லோகநாதன் என்ற விவசாயி காயமடைந்தார். (61)

## மட்டக்களப்பில் 24 தமிழர் கைது

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செட்டிப்பாளையத்தில் முகாமிட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோவினரும் இணைந்து கிரான்குளம் கிராமத்தினைச் சுற்றிவளைத்து 13பேரை கைதுசெய்து முகாம் கொண்டுசென்றனர்,

நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சுற்றிவளைப்பில் ஆண்களுடன் பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை கடந்த 16-ம் திகதி இப்பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் 11 பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டனர்.

### ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களும், ஹெலிகொப்டர் ஒன்றும், வை-12 ரக விமானங்களும் குண்டுமாரிகள் பொழிந்தன. இதன் பின் முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதல்களும் இயக்கச்சி பகுதி நோக்கி நடத்தப்பட்டன

நேற்று முன்தினம் வை-12 விமானம் பீப்பாக் குண்டு உருட்டியதில் கண்டி வீதியிலுள்ள தென்னம்தோட்டம் ஒன்றில் பல இளம் தென்னை மரங்கள் தேங்காய் குலைகளுடன் முறிந்து விழுந்துள்ளன.

பளைப்பகுதியிலும் அதன் அண்டிய பகுதிகளிலும் மக்கள் வாழ்ந்து கொண்டிருப்பதை நன்கு அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

பொம்மர், வை - 12, ஹெலி, ஷெல் தாக்குதல் குண்டுச்சத்தங்களுக்கு மத்தியிலும் அங்கு மக்கள் வழமை போல் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. [155]

### வெற்றிலைக்கேணியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விமானங்களின் உதவியுடனும் ஷெல், பீரங்கி தாக்குதலுடன் முன்னேறமுயன்றபோது கடும் போர் வெடித்தது.

விடுதலைப் புலிகளின் கடும் ஆர். பி. ஜி. தாக்குதலினால் இரு பவள் வாகனங்கள் முற்றாகத் தகர்க்கப்பட்டு, தீப்பற்றி எரிவதைக் காணக் கூடியதாக இருந்ததாகவும், இம்மோதலில் இரு தரப்பினருக்கும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதே வேளை ஆனையிறவு முகாமை முற்றுகையிட்டு வரும் விடுதலைப் புலிகள் முகாமை நோக்கிப் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டு முன்பு இருந்த இடத்திலிருந்து சற்று முன்நோக்கிச் சென்று, காவல் அரண்களை அமைத்துக் கொண்டுள்ளதாகவும், விமானங்கள் குண்டுகளை வீசமுடியாத நிலையில் வானத்தின் மிக உயரத்தில் வட்டமிட்டவண்ணம் பறந்து கொண்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனையிறவு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, மணல்ஆறு பகுதியில்கடந்த ஒருவாரத்தில் இடம்பெற்ற யுத்தத்தில் 10 இராணுவ உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்துள்ளது. (வி-56-153)

## வீரமரணம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் எதிர்பராமல் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிவிபத்தில் சோபு (வெற்றிவேல் - வசந்தன் பருத்தித்துறை) என்னும் போராளி வீரமரணமடைந்தார்.

இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைக் தெரிவித்துள்ளனர்.

### ஜா - பிரேமா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டின் தற்போதைய நிலைகுறித்தும் இரு தரப்பு உறவுகள் பற்றியும், மற்றும் பல விடயங்கள்குறித்தும் ஆரயப்பட்டதாம்.

புலிகளின் பலம் பெருமளவு வலுவடைந்துவருவது அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுதகி வருவதையடுத்தே இச் சந்திப்பு இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது. (சி)

### சாம் 7

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆனையிறவு மோதலில் புலிகள் விமான எதிர்ப்பு பீரங்கிகளை பயன்படுத்தி வருவதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### ஆனையிறவுப் போர்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்கான வாய்ப்பை தடைப்படுத்தும்.

இவ்வாறு இந்திய வானொலி நிருபர் தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவிக்கையில்: ஆனையிறவில் இருந்து புலிகளை அகற்றும் வரை சண்டை ஓயாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறியதாகவும், அது தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிரத்தால் தற்போதைக்கு சாத்தியமான விடயமல்லவென்றும், இதனால் சமாதானப் பேச்சுவார்த்தை இப்போதைக்கு தொடங்கக் கூடிய வாய்ப்பு இல்லையென்றும் கூறினார். (பூ)